2014 ஜூலை 11]

தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு 50 இலட்சம் ரூபாய் செலவாகிறது. கட்டடங்கள் கட்டுவதற்கு 37 கோடி ரூபாய் செலவாகிறது. Hostel வசதி, compound wall, auditorium இதுபோன்ற வசதிகள் ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதோடு, ஆண்டொன்றுக்கு 61 ஆசிரியர்கள் நியமிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. தாங்கள் சொல்கிற பகுதியில் கல்லூரிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறீர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரியும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி போன்ற இந்த மூன்று மாவட்டங்களையும் சேர்த்து மொத்தம் 65 பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், இந்த மூன்று மாவட்டங்களிலும் 56 கல்லூரிகள் இருக்கின்றன. அதில் அரசுக் கல்லூரிகளாக மூன்று கல்லூரிகளும், அரசு உதவிபெறும் கல்லூரிகளாக 2 கல்லூரிகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சொல்கிற கருத்தைப் பார்க்கும்போது, மற்றப் பகுதிகளைவிட இந்த மூன்று மாவட்டங்களில் கல்லூரிகள் சற்று குறைவாகத்தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

109—

நியாய விலைக் கடை

***13956—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், சித்தேரியிலுள்ள பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 11

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 759 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்த நெசல் முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து 292 குடும்ப அட்டைகளைப் பிரித்து, 1½ கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சித்தேரி பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அரசின் விதிமுறைப்படி முழு நேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், 292 குடும்ப அட்டைகளே உள்ள சித்தேரி பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேர நியாய விலைக் கடையாக மாற்ற சாத்தியக்கூறு இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய சித்தேரி பஞ்சாயத்துக்குட்பட்ட 2 கடைகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. சித்தேரி மற்றும் துந்திரிகம்பட்டு என்ற இரண்டு பகுதி நேரக் கடைகள் ஏறத்தாழ 900 குடும்ப அட்டைகளோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அது வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டுமே செயல்படுவதால், 100 நாள் வேலைத் திட்டத்திற்குச் செல்லக்கூடிய பெண்மணிகள் அங்கே சென்று பொருட்கள் வாங்க இயலாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்ட விதிகளைத் தளர்த்த வாய்ப்பு இருக்கும்பட்சத்தில் அதைத் தளர்த்தி, அங்கே ஒரு முழு நேர நியாய விலைக் கடையை அமைத்துத் தருவதற்கு முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2014 ஜூலை 11]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 292 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவரும் சித்தேரி நியாய விலைக் கடையில் அந்த ஊர்ப் பகுதி மக்கள் மட்டுமே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஊர் மக்களுக்கு மூன்று நாட்கள் தாராளமாக வழங்கப்படுகிறது. எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அந்தப் பகுதி மக்கள் எந்தக் கோரிக்கையும் இதுவரை வைக்கவில்லை. அதுமட்டுமல்ல, அதை நடத்துகின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கமானது 43 இலட்சம் ரூபாய்* cumulative loss–*ல் இயங்குகிறது. எனவே, கூடுதல் சுமை ஏற்படுகின்ற சூழ்நிலை இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—40

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, கடந்த மூன்று ஆண்டுகளில் மூன்று பகுதி நேரக் கடைகளும், ஒரு முழு நேரக் கடையும் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, சிறப்பான ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்து, நாட்டு மக்களுடைய பாராட்டுதலைப் பெற்றதோடு, இந்தியாவிலே தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இணையாக எந்த ஒரு முதலமைச்சரும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களைத் தங்குதடையின்றி வழங்கவில்லை என்ற அளவுக்கு ஒரு மிகப் பெரிய பெயரைப் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, பொது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பொருட்கள் எந்த வகையிலும் தங்குதடையற்ற முறையிலே கிடைக்க வேண்டும், உரிய முறையிலே கிடைக்க வேண்டுமென்று நினைக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை தற்போது பரிசீலிக்க இயலாது என்பதை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தேரி பஞ்சாயத்து ஊராட்சிமன்றத் தலைவருடைய வேண்டுகோளின்படிதான் இந்த வினாவையே நான் எழுப்பியிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், ஆரணி தொகுதிக்குட்பட்ட செய்யாறு ஒன்றியத்திலுள்ள மணலவாடி, மேல்புத்தூர், பனஞ்சேரி, விருமாந்தாங்கல், காரம்பேடு மற்றும் ஆரணி ஒன்றியத்திற்குட்பட்ட பழங்காமூர், அரிஹரநகர், வேதாஜிபுரம், புதுப்பேட்டை, வேலப்பாடி, சங்கீதவாடி, ஆதனூர் போன்ற பகுதிகளில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. வாய்ப்பிருந்தால், அந்தப் பகுதி நேர நியாய விலைக் கடைகளை முழு நேர நியாய விலைக் கடைகளாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆரணி தொகுதிக்குட்பட்ட காட்டுக்காநல்லூர் பஞ்சாயத்தில் இருக்கின்ற இராமச்சந்திரபுரம், கொங்கராம்பட்டு, கனகம்பட்டு, சங்கீதவாடி, ஆதனூர் போன்ற பகுதிகளிலே சொந்தக் கட்டடம் இல்லாத நிலையிலே நியாய விலைக் கடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேர நியாய விலைக் கடையாக மாற்ற வேண்டுமானால், அந்தக் கடையில் 500 குடும்ப அட்டைகள் வேண்டும். அந்தக் கடைக்கென்று தனியாக ஒரு விற்பனையாளரை நியமிக்க வேண்டும். அதுமட்டுமின்றி, அதற்கான அத்தியாவசியச் செலவுகள் கூடுதலாக ஆகிவிடும். இதுபோன்ற காரணங்களால்தான், இன்றைக்கு கூட்டுறவுத் துறை மூலமாக நடத்தப்படுகிற பகுதி நேர நியாய விலைக் கடைகளை முழு நேர நியாய விலைக் கடைகளாக மாற்றுவது என்பது சிரமமாக இருக்கிறது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்ற கடைகளுக்குச் சொந்தக் கட்டடம்

2014 ஜூலை 11]

கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்த பிறகு, 1,058 நியாய விலைக் கடைகளுக்குப் புதிதாக சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக எடுத்துக்கொள்வோமானால், அந்தச் சங்கம் வளமான சங்கமாக இருந்தால், அந்தச் சங்கமே கட்டடத்தைக் கட்டிக்கொள்ளலாம். இல்லாதபட்சத்தில், மாவட்ட ஊராட்சி முகமை நிதியிலிருந்தோ அல்லது சமூக நிதியிலிருந்தோ அல்லது சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுக்கும் நிதியிலிருந்தோ அங்கு இடம் இருக்கும்பட்சத்தில் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட, வருகிற காலத்தில் தங்கள் நிதியைக் கொடுக்கும்பட்சத்தில், இடம் இருக்கும்பட்சத்தில் அங்கு நியாய விலைக் கடைகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

110—

உணவு பதப்படுத்துதல்

***30668—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தொழில் முனைவோர்கள் யாராவது முன்வந்தார்கள்